IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.
O.S. No.56/2023
Deposition of Witness for DW1.

Name : திரு. ஹீமாறோஸ்
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.07.2025.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை தொடர்ச்சி

28.10.1998 தேதியிட்ட குளச்சல் சார்பதிவாளர் அலுவலகதில் பதியப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1, 12.04.2023 தேதியிட்ட கிரைய பத்திரம் வா.சா.ஆ.2, 20.05.2023 தேதியிட்ட 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் வா.சா.ஆ.3, அவற்றிற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை 2 எண்ணம் வா.சா.ஆ.4ன் வரிசை, 25.05.2023 தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு வா.சா.ஆ.5, 25.09.2023 தேதியிட்ட மின்கட்டண ரசீது பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.6,24.01.2024 தேதியிட்ட மின்கட்டண ரசீது பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.7. பிராதுபடி தீர்ப்பாக வேண்டும் என வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் MA BEd படித்து ஆசிரியராக முன்பு பணியாற்றினேன். வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் எனக்கு நினைவில் இல்லை. வழக்கு பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் 4 1/2 செண்ட். அதனை நான் அளந்து பார்த்தது இல்லை. வழக்கின் 2வது பிரதிவாதி மேரி எனது தாயார். 2வது பிரதிவாதிக்கு வழக்கு பட்டிகை சொத்தினை எனது பாட்டி ஞானபாக்கியம் விலைக்கு கொடுத்தார். எனது பாட்டி 1998ல் அவ்வாறு விலை கிரையம் எழுதிக்கொடுத்தார், ஆவண எண் நினைவில் இல்லை. 1998ல் எனக்கு 13 வயதிருக்கும். அந்த ஆவணம் எழுதும்போது அதுபற்றிய விபரங்கள்

எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால், சரிதான். இந்த வழக்கு பட்டிகை சொத்தின் அரசு மதிப்பு ( Guide line Value) எனக்கு தெரியாது. எனது தாயார் பட்டிகை சொத்தினை கிரையம் வாங்கிய பிறகு, அவருடைய பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்துவிட்டார் என்றாலும், தொடர்ந்து அவர் தான் தீர்வை செலுத்தி வந்தார் என்றாலும், சரிதான். இவ்வாறு தொடர்ந்து அனுபவம் வைத்திருந்தார் என்றால், சரிதான். எனக்கு திருமணம் ஆன பிறகு நான் நாகர்கோவிலில் வாடகை வீட்டில் குடிவசிக்கிறேன். எனது உடன் பிறந்தவர்கள் இரண்டுபேர், ஒரு தம்பி மற்றும் ஒரு தங்கை. எனது தாயார் , பிலோமினாள்/1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார். அந்த ஆவணம் எண் எனக்கு தெரியாது. எந்தவருடம் எனது தாயர் கிரையம் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தின் கரதீர்வை மற்றும் பட்டா ஆகியவை பிலோமினாள் பெயரில் உள்ளது என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. பிலோமினாள்/1ம் பிரதிவாதி உரிய கிரைய தொகை கொடுத்து தான் வழக்கு பட்டிகை சொத்தை எனது தாயாரிடமிருந்து விலைக்கு வாங்கினார் என்றால் அதுவிபரம் எனக்கு தெரியாது. நான் எனது தாயாரின் ஒப்புதலுடன் 02.10.2022ல் வழக்கு பட்டிகை சொத்தில் குடியேறினேன். பிலோமினாள்/1ம் பிரதிவாதி சொத்தினை கிரையம் வாங்க அளக்க வந்தபோது நான் அங்கு தான் இருந்தேன். 02.10.2022ல் குடியேறியதை காட்டுவதற்கு ஆவணங்கள் இல்லை. ஆதார் அட்டை உள்ளது. ( 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் காரணமாக சாட்சி தனது ஆதார் அட்டையை எடுத்து வழக்கறிஞரிடம் காட்டுகிறார். ) அந்த ஆதார் அட்டை 15.06.2024ல் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். வழக்கு பட்டிகை சொத்தை எனது தாயாரிடம் இருந்து கிரையம் வாங்கிய பிறகு 15 நாட்கள் கழித்து தான் நான் அதில் குடியேறினேன் என்றால், சரியல்ல. பிலோமினாள்/1ம் பிரதிவாதி தான் கிரையம் வாங்கிய வீட்டில் நான் சட்டவிரோதமாக குடியேறியது பற்றி குளச்சல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால், சரிதான். எனது முதல் மகன் 8ம் வகுப்பு 2024 முதல் நாஞ்சில் காத்தலிக் பள்ளி, வழுதனம்பள்ளத்தில் படிக்கிறார். 2022ல் எனது மகன் APJM பள்ளி காக்கவிளையில் படித்தான். அவ்வாறு தவறாக நான் குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. நான் செலுத்திய மின்கட்டணம் எனது தாயாரின் பெயரில் உள்ளது. தற்போது நான் தாக்கல் செய்த வா.சா.ஆ–6 மற்றும்

வா.சா.ஆ–7 மின்கட்டண ரசீதுகள் 24.01.2024 பிலோமினாள் பெயரில் உள்ளது என்றால், சரிதான். எனது தாயார் மேரி தற்போது வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீட்டில் குடியிருக்கவில்லை என்றால், சரிதான். 2024 டிசம்பரில் எனது தாயார் வீட்டை காலி செய்தார். அவ்வாறு நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றாலும், எனது தாயார் 12.04.2023 ல் காலி செய்தார் என்றால், சரியல்ல. 2024 ல் தான் எனது தாயார் காலி செய்தார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. வழக்கு பட்டிகை சொத்தில் எனக்கு உரிமை எதுவும் கிடையாது என்றால், அது என் பாட்டி சொத்து. என்னை காலி செய்ய சொல்வது பற்றியும், காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றியும், நான் என் தாயாரிடம் சொல்லவில்லை, சிறிது நாட்களாக பேச்சு வார்த்தை இல்லை. (பின்னிட்டு சாட்சி பிலோமினாள் வீடு பார்க்கவரும்போது என் அம்மாவிடம் சொன்னேன் என்று கூறுகிறார்) வீடு எத்தனை சதுர அடி என்று எனக்கு தெரியாது. அந்த வீட்டிற்கு தற்போது ரூ.10,000/– என்றால் ,ரூ.2000/– தான் இருக்கும். எனது அம்மாவிற்கு வழக்கு பட்டிகை சொத்தை கிரையம் கொடுப்பதற்கு முழு உரிமையுண்டு என்றால், சரிதான். 12.04.2023 தேதியிட்ட கிரைய பத்திரம் வா.சா.ஆ–2 முறையாக எழுதிகொடுக்கப்பட்டுள்ளது என்றால், பாட்டியின் சொத்து என்பதால் அது சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்திற்குள் சட்ட விரோதமாக நான் குடியிருந்து கொண்டு 1ம் பிரதிவாதிக்கு கஷ்டத்தை ஏற்படுத்துகிறேன் என்றால், சரியல்ல. அவர் நான் இருப்பதை தெரிந்துகொண்டுதான் அதை வாங்கினார். வழக்கு பட்டிகை சொத்திற்கு வாடகை எதுவும் நான் கொடுக்கவில்லை என்றால், எனது தாயார் வாடகை கேட்கவில்லை. வழக்கு பட்டிகை சொத்து பிலோமினாளுக்கு உரிமைப்பட்டது என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.